**<u>OS.NO. 46 /2014      DW-1</u>**

நாள் : 11.08.2024

பெயர் : கோகுல்

த/பெ : பூபாலன்

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்சி</u>**

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நீங்கள் சொல்லி தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் 14.06.2023 அன்று வருவாய்துறை அதிகாரிகள் முன் ஆஜராகும் படி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம் 2013 என்பதற்க பதிலாக 2023 என தவறாக பதியப்பட்டுள்ளது. 1941 முதல் 1987 வரை காலகட்டத்தில் வருவாய் துறை ஆவணங்களை பரிசீலனை செய்து அளந்து பார்த்தீர்களா என்றால் இல்லை. 1941 கிரயத்தின் போதும் 1987 கிரயத்தின் போதும் வருவாய் துறை ஆவணங்களை முன் வைத்து நீங்கள் அளந்து பார்க்கவில்லை என்றால் அது என் அப்பா காலத்தில் நடைபெற்றது.

வருவாய் துறை ஆவணங்களை சரிபார்திருந்தால் இந்த தவறு அப்போதே கண்டிபிடித்திருக்க கூடும் என்றால் ஆமாம், ஆனால் அப்போது பிரச்சனை இல்லாமல் இருந்தது. எப்போது வாருவாய் ஆவணத்தை வைத்து நிலத்தை அளந்து பார்த்தீர்கள் என்றால் 2014 ல் அளந்து பார்த்தேன். சர்வே எண் 243/எ2 வில் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 90 சென்ட் என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 ல் செக்குபந்தியில் சின்ன பையன் கொள்ளைக்கு தெற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம் சின்ன பையன் பெரிய பையன் இருவரும் சகோதரர்கள் அதனால் அவர்களுக்கிடையே பாகப்பிரிவினை நடைபெற்றுள்ளது. சின்ன பையனின் பாகம் தான் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

1941 ஆவணத்தில் சின்னபையன் கொள்ளைக்கு தெற்கு என்று செக்குபந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1947 ஆவணத்தில்

உள்ள செக்குபந்தியிலும் சின்னபையன் கொள்ளைக்கு தெற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 1941 பத்திரத்திலும் ஒரே சங்கதி தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 1941 மற்றும் 1947 ஆவணங்கள் அடிப்படையில் காணப்படும் சொத்துக்களின் எல்லைகளின் தான் உங்கள் அப்பா 1987 ல் கிரயம் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். 1941 மற்றும் 1947 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள அதே சொத்து விவரத்தை தான் உங்கள் அப்பா 1987 லும் கிரயம் பெற்றரா என்றால் ஆமாம், ஆனால் செக்குபந்தியல் காணப்படும் பெயர்கள் அவரின் வாரிசுகள் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது.

1941 மற்றும் 1947 ஆவணத்தில் மீசைக்காரன் என்ற சின்னபையன் நிலத்திற்கு தெற்கு என்று சொல்லப்பட்டுள்ளது ஆனால் 1987 ஆவணத்தில் பொன்னுசாமி நிலத்திற்கு தெற்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். இந்த வழக்கு போடுவதற்கு முன்பாகவே இந்த செக்குபந்தியின் தெற்கு பகுதியில் பொன்னுசாமிக்கு நிலம் உள்ளது என்ற விவரம் தெரியும் என்றால் வழக்கு போடும் சமயத்தில் தான் தெரியவந்தது. செக்கபந்தியில் காணப்படும் பொன்னுசாமி நிலத்திற்கு தெற்கு என்பதை நிரூபிப்பதற்கு பொன்னுசாமி ஆவணத்தை முன்னிலைபடுதினால் தான் தெரியவரும் என்றால் அவ்வாறு நீதிமன்றம் கோரினால் தாக்கல் செய்கிறேன்.

சர்வே எண் 1.90 ல் உள்ள 50 சென்ட்களை தவிர மீதம் உள்ள நிலங்கள் யார் அனுபவத்தில் உள்ளது என்று உங்கள் பதிலுரையில் சொல்லியிருக்கிறீர்களா என்றால் ஆமாம். இந்த வழக்கு சொத்து 1 ஏக்கர் 90 சென்ட்ல் அடக்கம் கிடையாது அது வேறு சர்வே எண்ணில் உள்ளது. 1941, 1947, 1987 ஆவணங்களில் சர்வே எண் 243எ/2 வில் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 90 சென்ட் என்பது தவறா என்றால் ஆமாம். மேற்சொன்ன சர்வே எண்ணில் 1 ஏக்கர் 57 சென்ட்டோ அல்லது 1 ஏக்கர் 60 சென்ட்டோ என்னிடம் உள்ளது. மீதம் உள்ள சொத்து பொன்னுசாமியிடமிருந்த கிரயம் பெற்ற நபரிடம் உள்ளது.

இதே சர்வே எண்ணில் 1 ஏக்கர் 90 சென்டில் 1 ஏக்கர் 57 சென்ட் உங்களிடம் உள்ளது என்று உங்கள் வாதுரையிலும் கோட்டாசியர் விசாரணையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் குறிப்பிட்டுள்ளேன். 1 ஏக்கர் 57 சென்ட் உங்கள் வசம் தான் உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் முன்னிலைபடுத்தியுள்ளீர்களா என்றால் பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் காணப்படுகிறது. 1 ஏக்கர் 57 சென்ட் உங்கள் வசம் உள்ளது என்பதை பற்றி பி.வா.சா.ஆ.6 ல் காணப்படுகிறதா என்றால் சாட்சி நாங்கள் மனு செய்திருந்தோம் அதன் மீது விசாரணை செய்தார்கள் என்று பதிவு செய்கிறார்.

பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் உரிமை கோருகிறேன். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் 1 ஏக்கர் 57 சென்ட் என்று உள்ளது என்றால் இது தான் பிரச்சனையே நான் ஏற்கனவே இது குறித்து சாட்சியத்தில் பதிவு செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.6 மாவட்ட வருவாய் அலுவலர் மூலமாக 14.06.2003 தேதியிட்ட உத்திரவு அந்த சமயத்திலேயே உங்களுக்கு சார்வு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.6 ஆவணத்திற்கு எதிராக வருவாய் அலுவலகத்தில் மேல்முறையீடு செய்தீர்களா என்றால் இல்லை. அவர்கள் நீதிமன்றத்தை அனுக சொன்னார்கள். நீதிமன்றத்தை அனுக சொல்லி உத்திரவு எதுவும பிறப்பித்தாரா என்றால் இல்லை வாய்மொழியாக தான் சொன்னார்.

மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை எண் 30121/2014 நீங்கள் தான் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம். அந்த உத்திரவில் உரிய நீதிமன்றத்தை அனுகி பரிகாரம் பெற்றுக் கொள்ளுமாறு உள்ளது என்றால் ஆமாம். மாண்புமிகு உயர் நீதிமன்றத்தின் நீதி பேராணை எண் 30121/2014 ல் வழங்கப்பட்ட 22.06.2022 தேதியிட்ட பதிவிறக்கம் செய்யப்பட்ட உத்திரவு **வ.சா.ஆ.8** ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1 ல் கிரயம் கொடுத்த நபருக்கு சர்வே எண் 243எ/3 ல் சொத்து

உள்ளது என்று நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை சர்வே எண் மட்டும் தான் தவறாக உள்ளது செக்குபந்தி அடிப்டையில் சொத்து சரியாக தான் உள்ளது.

பி.வா.சா.ஆ.1 ல் முன்னிலைபடுத்தப்பட்டுள்ள சர்வே எண்ணில் உள்ள சொத்தை நீங்கள் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. யூடிஆர் சர்வே செய்வதற்கு முன்பாக சர்வே எண் 243எ/3 ல் உள்ள சொத்து யார் பெயரில் இருந்தது என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் சர்வே எண் தவறாக குறிப்பிடப்பட்டிருந்தது இது வருவாய் துறையின் தவறாகும். தகப்பானார் மறைவுக்கு பிறகு பட்டா மாற்றம் செய்ய முற்பட்ட போது தான் பிரச்சனை இருந்தது தெரியவந்தது. யூடிஆர் பட்டாவில் தவறு நடந்துள்ளது என்று எவ்வாறு தெரியவந்தது என்றால் மாவட்ட வருவாய் அலுவலர் விசாரணையில் தான் தெரியவந்தது. யூடிஆர் க்கு முன்பாக உங்களுக்கு கிரயம் செய்து கொடுத்த நபர்கள் பெயரில் பட்டா இருந்து வந்தது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம்.

வாதி தாக்கல் செய்த வழக்கின் விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி தன் வாதுரையில் இது பட்டியலின சமுதாயத்தினருக்கு வழங்கப்படும் சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அது தவறு. உங்களுடைய எதிரூரையில் வாதியின் வாதுரையில் சொத்தானது பட்டியலினத்துக்கு வழங்கப்பட்ட சொத்து என்பதை மறுத்து நீங்கள் சொல்லவில்லை என்றால் அது தவறு என்பதால் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை. 1941, 1947 மற்றும் 1987 ஆவணங்களில் சர்வே எண் பிழையாக உள்ளது என்பதை சரிசெய்ய சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொண்டிர்களா என்றால் இல்லை ஆனால் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் நீதி பேராணை 30121/2014 தாக்கல் செய்துள்ளேன்.

மாவட்ட வருவாய் அலுவலர் 2013 ல் பி.வா.சா.ஆ.6 உத்திரவிற்கு பிறகு விளம்புகை பரிகாரம் கேட்டு சிவில் வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா

என்றால் இல்லை அதற்கு தான் நீதி பேராணை 30121/2014 தாக்கல் செய்தேன். இதே வழக்கில் உங்களுக்கு தான் சொத்தது உரிமையானது என்று எதிரிடை உரிமை வழக்கு (Counter Claim) தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. சர்வேயர் அளந்து 1 ஏக்கர் 90 சென்டை அளந்து 1 ஏக்கர் 50 சென்ட் உங்களுக்கு தான் உரிமையானது என்று சொல்லியுள்ளாரா என்றால் மாவட்ட வருவாய் அலுவலர் உத்திரவில் (பி.வா.சா.ஆ.6) இந்த விவரம் காணப்படுகிறது. இரயில்வே துறையினர் திண்டிவனம் – நகரி பணிகளை மேற்கொள்வதற்காக நிலம் ஆர்ஜதம் செய்யும் போது தான் நிலம் முதல் முறையாக அளக்கப்பட்டது என்றால் நான் ஏற்கனவே மனு செய்து அளந்து பார்த்தேன். இரயில்வே துறையினர் அவர்களுடைய பணிக்காக அளந்தார்கள்.

இரயில்வே துறையினர் அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். 10 வருடத்திற்கு முன்பாக அறிவிப்பு கொடுத்து தான் அளந்தார்கள். வ.சா.ஆ.1 ஆவணம் வட்டாட்சியரால் தான் வழங்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வ.சா.ஆ.1 ஆவணத்தை ரத்து செய்ய வேண்டி உத்திரவு எதுவும் நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இதை பற்றி எனக்கு எந்த விவரமும் தெரியாது. வ.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை வ.சா.ஆ.1 ஆவணம் போலி ஆவணமாகும். வ.சா.ஆ.4 ஆவணம் யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு கிரயம் கொடுத்த நபரின் கணவர் பெயரில் உள்ளது.

வ.சா.ஆ.4 ஆவணம் சின்னபையன் வாரிசுகள் மீனா, செல்லம்மாள், கங்கன் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். வ.சா.ஆ.5 ஆவணம் சின்னபையன் வாரிசுகள் மீனா, செல்லம்மாள், கங்கன் பெயரில் உள்ளது என்றால் ஆமாம். 1941, 1947, 1987 ஆவணங்களில் கிரயம் கொடுத்த நபர்களுக்கும் தாவா சொத்துக்கும் எந்த உரிமையும் இல்லை அவர்கள் எந்த

காலத்திலும் அந்த சொத்தை அனுபவத்தில் வைத்திருந்தது இல்லை என்றால் ஆமாம். உங்கள் அனுபவத்தில் உள்ள 2 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள சொத்தில் நீங்கள் சூளை வைத்து பயன்படுத்தி வருகிறீர்கள் என்றால் ஆமாம். அந்த 2 ஏக்கர் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பதை காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் சூளை வைத்திருக்கும் இடத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்மந்தம் இல்லை.

உங்களுடைய பிரமாண வாக்குமூலம் மற்றும் பதிலுரையில் தாவா சொத்து நிலத்தில் தான் சூளை நடத்தி வருவதாக குறிபிட்டுள்ளீர்கள் என்றால் ஆமாம் நான் அந்த இடத்தில் தான் சூளை வைத்து நடத்தி வருகிறேன். தாவா சொத்தின் மீது உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை உரிமை இல்லாத சொத்தை அபகறிக்கும் நோக்கத்தில் எதிர் வாதம் செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு சொத்தில் உரிமை இல்லாத காரணத்தால் தான் ஆவணங்களை திருத்தம் செய்ய கோரி எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்ல என்றால் அது தவறு. வாதி கோரியுள்ளவாறு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதியானவர் என்றால் சரியல்ல.மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதி பேராணை 30121/2014 உத்திரவிற்கு எதிராக மேல்முறையீடு செய்யவில்லை என்றால் ஆமாம்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ***********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.